**வாசிக்க**: **தானியேல்** 3:1-18

**சாத்ராக்**, **மேஷாக்**, **ஆபேத்நேகோவின் விசுவாசம்**

நேபுகாத்நேச்சராகிய ராஜா தானியேலை உயர்த்திய போது, அவன் தன் நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிற்காக பரிந்து பேசி அவர்களை மாகாணங்களுக்கு அதிபதி ஸ்தானத்தில் உயர்த்தி வைத்தான். திடீரென ராஜா ஒரு பெரிய பொற்சிலை செய்வித்து, தினமும் குறித்த நேரத்தில் தாளங்கள் வாசிக்கும்போது, தேசத்தில் உள்ள யாவரும் அந்த சிலையை வணங்கவேண்டுமென கட்டளை இட்டான். வணங்காதவர்களை எரிகிற அக்கினி சூளையில் போடப்படும் என அறிவித்தான். ஆனால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூவரும் அந்த சிலை முன் பணியவில்லை. இதை அறிந்த ராஜா அவர்களை அழைத்து இப்போது பணியுங்கள் என கட்டளை கொடுத்தான். அதற்கு அவர்கள் ராஜாவை நோக்கி: இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.

**கேள்வி**:

1) இவர்களுக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது?

2) நமக்கு மேலுள்ள அதிகாரத்திற்கு கீழ்படிய வேண்டும் என வேதம் சொல்லுகிறதே. இப்படி எதிர்த்து பேசலாமா..?

**பதில்**:

1) அசாதாரண தைரியம்:

அவர்கள் மூவரும் தேவன் வைத்த அன்பு, நம்பிக்கை, விசுவாசமே அவர்களுக்குள் தைரியம் வரவழைத்தது. அதில் அவர்கள் அவர்களுடேய உயிரைக் காட்டிலும் தேவனை அதிகமாக நேசித்தார்கள் என்பது அவர்கள் அறிக்கையில் வெளிப்பட்டது. தேவன் எங்களை தப்புவியாமற்போனாலும் அவரையே தொழுவோம். தேவன்மேல் நாம் வைக்கும் நேசம் நமக்கு தைரியம்தரும்.

2) வேதத்தை கவனமாக பார்த்தால் கர்த்தருக்குள் தான் நாம் எல்லா அதிகாரங்களுக்கு கீழ்படியவேண்டும். அவருக்கு பிரியமில்லாத காரியங்களை பாவங்களை செய்ய அவர் கட்டளை தரவில்லை. ஆதலால் தேவனுக்கடுத்த காரியங்களில் ஜீவனே போனாலும் அவருக்கு பிரியமாக வாழவே நம்மை அழைத்திருக்கிறார்.

அருமையான தம்பி தங்கைகளே நீங்கள் படிக்கிற வேலைசெய்கிற இடங்களில் இந்த மூவரை போல தேவனுக்காக நீங்க வாழ்ந்தால், அவர் உங்களுக்காக என்ன செய்வார் என நாளை பார்க்கலாம். நீங்களும் அவரில் அன்பு கூர்ந்து உலகத்திற்கு எதிராக நிற்பீர்களா...?

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? ரோமர் 8 :36

## ஜெபம்

பரிசுத்த பிதாவே! இன்றைய பாடத்துக்காக நன்றி விசுவாசத்தில், தீர்மானத்தில் உறுதியாயிருந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை போல் நாங்களும் வாழ உதவி செய்திடுங்கள். ஆமென்